பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

28 11 2024 **THURSDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பாதுகாப்புப்படை உட்பட அனைத்துத்துறைகளிலும் பெண்கள் முக்கிய பங்காற்றி வருவதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

2. எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் இன்றும் நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டன.

3. தமிழகத்தில் பல்வேறு ரயில்வேத் திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

4. தென்மேற்கு வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், நாகப்பட்டினத்திற்கு தென்கிழக்கே 310 கிலோமீட்டர் தொலைவில் மையம் கொண்டுள்ளது.

5. சையது மோடி பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து மற்றும் ஆயுஷ் ஷெட்டி காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>>

பாதுகாப்புப்படை உட்பட அனைத்துத்துறைகளிலும் பெண்கள் முக்கிய பங்காற்றி வருவதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

குன்னூர் வெலிங்டன் முப்படை அதிகாரிகள் பயிற்சி கல்லூரியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய அவர், உலகிலேயே உயரமான சியாச்சின் போர் களத்தில் பெண் வீரர்கள் பணியில் உள்ளதை சுட்டிக்காட்டினார்.

துணிச்சல் மிக்க பெண் வீரர்கள் ராணுவம், விமானப்படை மற்றும் கடற்படையில் உள்ளதாக குறிப்பிட்ட அவர், கடற்படை தளபதியாகவும் செயல்பட்டு வருவதாகவும் கூறினார்.

இந்தியாவில் அதிநவீன போர் கருவிகளை உற்பத்தி செய்வதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதாகவும், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கருவிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு சுயசார்பு இயக்கத்தின்கீழ் தயாரிக்கப்பட்ட தளவாட கருவிகள் அனுப்பப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

உலகில் அதிகரித்துவரும் சைபர் குற்றங்களை தடுப்பதற்கும், இஸ்ரோவின் மூலம் கிரகங்களுக்கு இடையே செல்லும் செயற்கைக்கோள்களை தயாரிக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

மத்திய அரசு இந்தியாவை உயரிய நிலைக்கு கொண்டு சென்றுள்ளதாகவும், உலகம் அனைத்தும் ஒரே குடும்பம் என்ற கொள்கையுடன் செயல்பட்டு அமைதியை நிலைநாட்டி வருவதாகவும் குடியரசுத் தலைவர் குறிப்பிட்டார்.

முன்னதாக, வெலிங்டன் ராணுவ பயிற்சி கல்லூரி வளாகத்தில் உள்ள போர் நினைவு சின்னத்தில் மலர் வளையம் வைத்து அவர் மரியாதை செலுத்தினார்.

<<<<<<>>>>>>

எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் இன்றும் நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவை இன்று காலை கூடியதும் காங்கிரஸ், சமாஜ்வாதி, திமுக உள்ளிட்ட கட்சிகளின் உறுப்பினர்கள் இந்தியாவில் உள்ள முக்கிய தொழில் குழுமம் ஒன்றின்மீது லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டிருப்பது குறித்து விவாதிக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

அவையின் மையப்பகுதிக்கு வந்து இந்த விவாதத்திற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று அவர்கள் கோஷங்களை எழுப்பினர்.

அவைத்தலைவர் திரு ஓம். பிர்லா, உறுப்பினர்கள் அமைதி காத்து இருக்கையில் அமர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளை முடக்கும் வகையில் தொடர்ந்து ஈடுபடுவது ஏற்க முடியாது என்று அவர் கூறினார்.

கூச்சல், குழப்பம் நிலவிய போதும் அவைத்தலைவர் கேள்விநேரத்தை நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்.

மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், ரயில்வே மற்றும் தகவல் தொழில்நுட்ப மசோதா குறித்த கேள்விகளுக்கு தமது பதிலை அளித்தார்.

இருப்பினும், அவையை தொடர்ந்து நடத்த இயலாமல் போனதால், மக்களவை நண்பகல் 12 மணிவரை ஒத்திவைக்கப்பட்டு, பின்னர் நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

முன்னதாக, இடைத்தேர்தலில் மக்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் உறுப்பினர்கள் திருமதி பிரியங்கா காந்தி, திரு **Ravindra Chavan** பதவியேற்றுக்கொண்டனர்.

மாநிலங்களவையிலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இதே கோரிக்கையை வலியுறுத்தி அமளியில் ஈடுபட்டதால் மாநிலங்களவை நடவடிக்கைகளும் இன்றும் நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டன.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் பல்வேறு ரயில்வேத் திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

மக்களவையில் இதுதொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், இந்த ஆண்டு ஏப்ரல் ஒன்றாம் தேதிவரை 33 ஆயிரத்து 467 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

மொத்தம் 2 ஆயிரத்து 587 கிலோமீட்டர் தொலைவிற்கு பத்து புதிய ரயில் வழித்தடங்களும், மூன்று அகலப்பாதை அமைக்கும் பணிகளும், ஒன்பது இருவழிப்பாதை அமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

மாநில அரசின் மூலம் ரயில்வேத் திட்டங்களை செயல்படுத்துவதற்கான நிலம் கையப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிட்ட அவர், இதுவரை 866 ஹெக்டேர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டதாகவும், 2 ஆயிரத்து 523 ஹெக்டேர் நிலங்கள் கையப்படுத்த வேண்டிய நிலை உள்ளதாகவும் கூறினார்.

திண்டிவனம் - திருவண்ணாமலை இடையே புதிய ரயில்பாதையும், அத்திப்பட்டு – புத்தூர் இடையே புதிய ரயில்பாதையும், மொரப்பூர் - தருமபுரி, மன்னார்குடி – பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் - பட்டுக்கோட்டை ஆகிய வழித்தடங்களில் புதிய ரயில் பாதைகளும் அமைக்கப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான தொகுதி மேம்பாட்டு நிதி உயர்த்தப்படுவது குறித்து அரசு ஆய்வு செய்து வருவதாக மத்திய திட்டமிடல் துறைக்கான இணையமைச்சர் திரு ராவ் இந்திரஜித் சிங் கூறியுள்ளார்.

இதுதொடர்பான கேள்விக்கு மக்களவையில் எழுத்து மூலம் பதிலளித்துள்ள அவர், தொகுதி மேம்பாடு நிதி குறித்தும் அதன்மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்கள் குறித்தும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும், அதன் அடிப்படையில் நிதியை உயர்த்தி வழங்குவது தொடர்பான ஆலோசனைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

தென்மேற்கு வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், நாகப்பட்டினத்திற்கு தென்கிழக்கே 310 கிலோமீட்டர் தொலைவிலும், சென்னைக்கு தெற்கு – தென்கிழக்கே 480 கிலோமீட்டர் தொலைவிலும், புதுச்சேரிக்கு தென்கிழக்கே 410 கிலோமீட்டர் தொலைவிலும் மையம் கொண்டுள்ளது.

இந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலத்தின் வேகம் தற்போது வெகுவாக குறைந்துள்ளது.

மணிக்கு இரண்டு கிலோமீட்டர் வேகத்திலேயே நகர்ந்து வருவதாக இந்திய வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

வட தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் இடையே 50 முதல் 60 கிலோமீட்டர் வேகத்தில் இது கரையை கடக்கும் என்றும், சில நேரத்தில் 70 கிலோமீட்டர் வரை சூறைக்காற்றின் வேகம் அதிகரிக்கக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், நாளைக்குள் புயலாக மாறி கரையை கடக்கக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, நாகை மாவட்டத்தில் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மருத்துவம் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பதற்கு மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு உணவுப்பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளும் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - செல்வன் ஜெபராஜ் - 35 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

வங்கக்கடலில் உருவாகியுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக, இலங்கையில் கடல் சீற்றம், சூறைக்காற்று மற்றும் கனமழையால் அதிக அளவில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாக அங்குள்ள எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மழை வெள்ளம் மற்றும் சூறைக்காற்றின் காரணமாக, உயிரிழந்தோர் எண்ணிக்கை 12-ஆக உயர்ந்துள்ளது.

மேலும் இரண்டு பேரை தேடும் பணி நடைபெற்று வருகிறது.

பேரிடர் மீட்புப்படையினர் மீட்புப்பணிகளில் முழுவீச்சில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

23 மாவட்டங்களில் 3 லட்சத்து 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக பேரிடர் நிர்வாக மையம் தெரிவித்துள்ளது.

திரிகோணமலையிலிருந்து வடகிழக்காக 110 கிலோமீட்டர் தொலைவில் மையம் கொண்டுள்ள இந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், வடக்கு – வடமேற்கு திசையில் நகர்ந்து, புயலாக மாறுவதற்கு வாய்ப்புள்ளதாக அந்நாட்டின் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

267 நிவாரண முகாம்களில் 27 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 61 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் மோசமான வானிலையால் வீடுகளை இழந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

காஸா போரின்போது மனித உரிமை மீறலில் ஈடுபட்டதாக இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நெத்தன்யாகு மற்றும் அந்நாட்டு முன்னாள் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு **Yoav Gallant** ஆகியோர் மீது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள வாரண்ட் உத்தரவை திரும்பப்பெற வேண்டும் என இஸ்ரேல் முறையீடு செய்துள்ளது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் சட்டவரம்புக்குள் இஸ்ரேல் வரவில்லை என்றும், அந்த அமைப்பில் உறுப்பினராகவும் இல்லை என்றும் அந்த முறையீட்டு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவும், பிரான்ஸும், இஸ்ரேல் பிரதமர் மற்றும் பாதுகாப்புத்துறை அமைச்சர்கள் மீது பிறப்பிக்கப்பட்ட கைது வாரண்டுகளை நிராகரித்துள்ளன.

இங்கிலாந்தும், கனடாவும் இந்த வாரண்ட் உத்தரவை செயல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளன.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

சையது மோடி பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து மற்றும் ஆயுஷ் ஷெட்டி காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

புனேயில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் பி வி சிந்து, 21-10, 12-21, 21-15 என்ற செட் கணக்கில் சக வீராங்கனையான இரா சர்மாவை வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் ஆயுஷ் ஷெட்டி, 21-12, 21-19 என்ற செட் கணக்கில் மலேசியாவின் **Justin Hoh**-ஐ வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில் மெய்ரபா லுவாங் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் துருவ் கபிலா – தனிஷா கிராஸ்டோ இணை, சத்தீஷ் கருணாகரன் - ஆதியா வாரியத் இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

-------

ஆசிய கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா - ஜப்பானை எதிர்கொள்கிறது.

மஸ்கட்டில் இப்போட்டி இரவு மணி 8-30-க்கு தொடங்குகிறது.

---------

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் கேரளா அணி – கோவா அணியை எதிர்கொள்கிறது.

கொச்சியில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

-------

ப்ரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் உத்திரபிரதேச அணி – ஜெய்பூர் அணியையும், மும்பை அணி – தெலுகு அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<<<END>>>>>>